ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




'ஹரே ராம...' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை
இடம்: வ.உ.சி. கல்லூரி மைதானம், தூத்துக்குடி
நாள்: 01.01.2008 நேரம்: மாலை 6 – 8

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே


வேணு : 13 | பிப்ரவரி – 2008 | கானம் : 7



ஹனுமத் ஜெயந்தி – சுந்தர ஹனுமார்
தேதி: 08.01.08



சுந்தர ஹனுமார் திருக்கோவில்
பெங்களூரு



வீர ஆஞ்சநேயர் சன்னதி,
ஸ்ரீகல்யாணஸ்ரீநிவாச
பெருமாள் திருக்கோவில்
மஹாரண்யம்





மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை
இடம்: தஞ்சாவூர் தேதி: 09.12.07



அத்யயன உத்சவம்
இடம்: மதுரபுரி ஆஸ்ரமம்
தேதி: 03.01.08 – 12.01.08



மகர சங்கராந்தி
இடம்: மதுரபுரி ஆஸ்ரமம்
தேதி: 15.01.08









மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை, தூத்துக்குடி தேதி: 01.01.08

Date of publication : 5th & 6th of Every month

| Regd. No. TN/CC (S) DN / 119 / 06-08 | Licensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 06 - 08 |
|---|---|

| வேணு : 13 | பிப்ரவரி – 2008 | கானம் : 7 |
|---|---|---|

மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை
இடம்: வ.உ.சி. கல்லூரி மைதானம், தூத்துக்குடி
நாள்: 01.01.2008



வரவேற்புரை
டாக்டர் ஆ. ராக்பரநாதன்



இறை வணக்கம்
இமயம் பள்ளி
மாணவிகள்



நாம அனுபவங்கள்
திரு. விஜய்





திரு. கற்பகவனி



நன்றி உரை
திரு. ஜேசு பிரகாஷ்



திரு. ஞானரத்தகிரி



திரு. கதிரேசன்



திரு. குமாரவேல்



திரு. குணதுரை

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Kalaivani of Sri Maruthy Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor: S. Sridhar.

**Related Websites: www.madhuramurali.org / www.namadwaar.org**
**E mail: contact@madhuramurali.org; publications@madhuramurali.org**

NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 13 பிப்ரவரி 2008 கானம் : 7

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம் ... | 4 |
| 2. | மதுரமான மஹனீயர் - 144 ... | 6 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் ... | 8 |
| 4. | பகவத் கீதையில் பகவன் நாமாக்கள் ... | 10 |
| 5. | பாலகர்களுக்கு ஒரு கதை-116 ... | 12 |
| 6. | மாலே மணிவண்ணா -58 ... | 14 |
| 7. | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் ... | 17 |
| 8. | ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஸம்பாஷணைகளிலிருந்து-142 ... | 23 |
| 9. | செய்திகள் ... | 27 |


Published by
V. Sankaran
on behalf of
Guruji Sri Muralidhara
Swamigal Mission,
Chennai - 83.

11-02-2008
(வஸந்த பஞ்சமி)
மஹாரண்யம்
ஸ்ரீ கல்யாண
ஸ்ரீநிவாஸ பெருமாள்
பிரதிஷ்டா தினம்

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

ஸ்ரீ ஹரி:

# நல்லோருடன் சில வார்த்தைகள்

## - ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

வாசகர்களுக்கும் மற்றவர்களுக்கும் சில விஷயங்களைத் தெரியப்படுத்த விரும்புவதால் இதை எழுதுகின்றேன்.

ஆடுதுறை அருகில் திருமங்கலக்குடி என்று ஓர் ஊர் உண்டு. அங்கிருந்து, பகவந்நாம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் சித்தியாகியுள்ள கோவிந்தபுரம் மிகவும் சமீபம். நான் விடுமுறைக்கு மற்றும் எப்பொழுதெல்லாம் என்னுடைய அத்தை வீட்டிற்கு செல்வேனோ, அப்பொழுதெல்லாம் கோவிந்தபுரம் சென்று அங்கு பல மணி நேரங்கள் ‘ராம’ நாமம் ஜபம் செய்துகொண்டு அமர்ந்திருப்பேன்.

என்னுடைய மூத்த சகோதரர் திரு. ஸ்ரீநிவாஸன், வடலூர் - Seshasayee Industries Ltdல் வேலை பார்த்து வந்த சமயத்தில், வடலூர் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் அவர்கள் நிர்மாணித்த சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்குச் சென்று ‘திருவருட்பா’வை கணக்கில்லாமல் பாராயணம் செய்திருக்கின்றேன். என்னுடைய இரண்டாவது பெரிய சகோதரர் திரு. நரசிம்மன், பண்ருட்டியில், Electricity Boardல் வேலை பார்த்து வந்த பொழுது, எப்பொழுதெல்லாம் பண்ருட்டி செல்கின்றேனோ அப்பொழுது எல்லாம் வடவாம்பலம் ஆத்ம போதேந்திராள் அதிஷ்டானத்தில் அமர்ந்து பல மணி நேரங்கள் தியானம் செய்வேன்.

இதைபோல், நெரூர் சதாசிவ பிரும்மேந்திராள் அதிஷ்டானம், கும்பகோணம் விஜயீந்த்ர ஸ்வாமிகள் அதிஷ்டானம் போன்ற இடங்களிலும் மாதக் கணக்கில் தியானம் செய்துள்ளேன். என்னுடைய சித்தப்பா குடும்பம் தங்களை முழுவதுமாக திருக்கோவிலூர் ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகளிடம் ஒப்படைத்துக் கொண்ட குடும்பம். குழந்தையாக இருக்கும்பொழுதே எனது தந்தையுடன் சென்று பலமுறை ஞானானந்தகிரி ஸ்வாமிகளை தரிசனம் செய்துள்ளேன்.

சென்னையில் உள்ள மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்கு காலையிலும் மாலையிலும் சென்று பல வருடங்கள் தியானம் செய்து உள்ளேன். திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்திலும் பல நாட்கள் தங்கி உள்ளேன். காஞ்சி பெரிய பெரியவர்கள் வாழ்ந்த காலத்தில், மாதக்கணக்கில் அவர்களுடன் தங்கி இருந்துள்ளேன். திருவண்ணாமலை பகவான் யோகி ராம்சுரத் குமார் அவர்களை பலமுறை தரிசனம் செய்துள்ளேன். ஷீரடி பாபா, சிருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளிடமும் எனக்கு ஈடுபாடு உண்டு. ஸ்ரீ ஸ்ரீ அண்ணா க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளிடம் எனக்கு ஈடுபாடு உண்டு. அதுபோல், எங்களது குல குருவான காஞ்சி காமகோடி பீடாதிபதிகளிடமும் ஈடுபாடு உண்டு.

மேற்படி விஷயங்கள் தனி. ஆனால், இன்றைய கால கட்டத்தை அனுசரித்து மத, இன, மொழி, தேச வேறுபாடுகள் இன்றி எல்லோருக்கும் இறையருள் எளிதாக கிடைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன், மதுரமுரளியில் கேள்வி - பதில் பகுதியில் நான் தரும் பதில்களிலும், என்னுடைய பேச்சுக்களிலும் நான் தெரிவிக்கும் கருத்துக்கள் என்னுடைய சொந்த கருத்துக்களே. அந்தக் கருத்துக்களை ஒட்டியே, நம்முடைய செயல்பாடுகளும் அமைந்துள்ளன.

**இவை, மேற்படி மஹான்களுடைய கருத்துகளோ, அவர்கள் ஏற்படுத்திய ஸ்தாபனத்தின் கருத்துகளோ அன்று. யாருடைய கருத்தையும் நான் என்னுடைய செயல்களிலோ பேச்சுக்களிலோ பிரதிபலிக்கவில்லை. யாருடைய பிரேரணையின் பேரிலும் நான் இவற்றை சொல்வதில்லை. செய்வதில்லை.**

யாரையும் புண்படுத்துவதோ, விமர்சிப்பதோ, அவர்களுடைய வளர்ச்சியை பாதிப்பதோ என்னுடைய நோக்கம் அன்று. எல்லோருக்கும் எவ்வித பாகுபாடுமின்றி இறையருள் சுலபமாக கிடைக்க வேண்டும் என்பதே நமது ஒரே நோக்கம்

என்னுடன் பழகியவர்களுக்கும் என் இதயம் புரிந்தவர்களுக்கும் இது புரியும்.

**- ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**

# ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

*ராகம்: ஆனந்தபைரவி* *தாளம்: ஆதி*

## பல்லவி

*கண்ணாரக் காணீரே! - கல்யாண வேங்கடேசனை (கண்ணார)*

## சரணங்கள்

*கந்தர்வராஜ ஸம அழகன் மத்தயானை நடையழகன்*
*குங்கும கோமள உதடழகன் சங்கசக்ரதர கையழகன் (கண்ணார)*

*மஞ்சள் வண்ண பட்டாடையுடுத்தி*
*மணிஅணிகலன்கள் பல அணிந்து*
*குஞ்சரமேல் ஒய்யாரமாய் அமர்ந்து*
*ச்ருங்காரராஜன் பவனி வந்தான் (கண்ணார)*

*விண்ணவர்கள் துந்துபி முழங்க*
*கின்னரர்கள் கட்டியம் இசைக்க*
*மறையவர்கள் வேதம் ஓத,*
*மண்ணுலகம் வியக்க வந்தான் (கண்ணார)*

*மணித்தேங்காயை ஆகாசராஜன் தர,*
*பணிப்பெண்கள் சாமரம் வீச,*
*அணியணியாய் சீர்வரிசை வர,*
*தனியொருவனாய் மிளிர்ந்து நின்றான் (கண்ணார)*

*அடிமேலடி எடுத்து வைத்துச்*
*சேடிமார்கள் புடைசூழ*
*அன்ன நடை நடந்து அலர்மேல் மங்கை*
*மன்னனுக்கு மாலையிட்டு மகிழ்ந்தாள் (கண்ணார)*

*ஊர்வசி பொன்னூஞ்சல் ஆட்ட,*
*தும்புருவும் நாரதரும் பாட*
*கற்புடைக் கன்னியர் கண்ணேருகழிக்க*
*வாழி வாழி என்று வாழ்த்தினர் பெரியோர் (கண்ணார)*

*மன்னவனைக் கைப்பிடித்து மங்கைமுன் செல்ல*
*தீ வலம் வந்து பொறிமுகம் தட்டி*
*அம்மி மிதித்து அருந்ததி பார்த்து*
*மங்களநாணும் சூட்டினான்* *(கண்ணார)*

*நலங்கு கழிந்து மாலைப்பொழுதும் வர*
*அலர்மேல்மங்கையுடன் அமர்ந்து*
*மங்கையர் மங்கர ஆரத்தி எடுக்க,*
*மங்கள வீதி வலம் வந்தான்* *(கண்ணார)*

## நாமாவளி

*மங்காபுரபதே கோவிந்த*
*கங்கணபூஷண கோவிந்த ।*
*சங்கர்ஷணரூப கோவிந்த*
*கங்காபாத கோவிந்த ॥*


ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி**

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.
ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நிதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை, தபால் தலை ஒட்டிய உறை மீது, ''பிரார்த்தனைப் பெட்டி'' என்று குறிப்பிட்டு அனுப்பினால், பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். பிரசாதத்திற்குக் கட்டணம் ஏதும் கிடையாது. பிரார்த்தனைகள் நிறைவேறியதும் நன்றிக் கடிதங்கள் அனுப்பினால் போதுமானது.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாகக் காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

## மதுரமான 144 ஞானியர்

நம்முடைய கண்கள் மூலம் நாம் சில காட்சிகளைக் காண்கின்றோம். அதற்கு மேலும் நாம் காண்பதற்கு ஆசைப்பட்டால் தொலைநோக்கி, நுண்நோக்கி போன்றவைகளைப் பயன்படுத்தி அவற்றைக் காண்கின்றோம். அதுபோல், தியானத்தின் மூலம் மனது ஒருமுகப்பட்டால், அந்த மனதின் மூலம் பல விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியும். அப்படி வந்த காட்சிகளைப் பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் எப்பொழுதாவது சொல்வது உண்டு.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், மார்கழி மாதம் மதுரபுரி ஆஸ்ரமத்தில் தினமும் பிரேமிகவரதனுக்கு பூஜை செய்து, ஊஞ்சலில் எழுந்தருளச்செய்து அத்யயன உத்ஸவம் செய்து வந்தார்கள். தன் மனது ஹனுமாரிடமும், க்ருஷ்ணனிடமும் மாறி மாறிச் செல்வதை உணர்ந்தார்கள். 'க்ருஷ்ணா! நீயோ பக்தர்களை காப்பாற்றுவதற்காக கோவர்த்தன மலையை தூக்கினாய். ஹனுமன்! நீயோ பகவானையே காப்பாற்றுவதற்காக சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கினாய். க்ருஷ்ணா! நீயோ பக்தர்களுக்காகத் தூது சென்றாய்! ஹனுமன்! நீயோ பகவானுக்காக தூது சென்றாய். க்ருஷ்ணா! நீயோ பலி முன்பாக பெரிய உருவம் எடுத்தாய்! ஹனுமன்! நீயோ சீதை முன்பாகப் பெரிய உருவம் எடுத்தாய்! க்ருஷ்ணா! உனக்கும் காந்தாரி கொடுத்த சாபம் உண்டு. ஹனுமன்! உனக்கும் உன் பலம் மறந்து போகட்டும் என்ற சாபம் உண்டு. க்ருஷ்ணா! உனக்கும் வன ஸஞ்சாரம் பிடிக்கும். ஹனுமன்! உனக்கும் வன ஸஞ்சாரம் பிடிக்கும்' என்று சொல்லிக்கொண்டே போனார்கள்.

இந்த மார்கழி மாதம் மூல நட்சத்திரத்தன்று, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பெங்களூருக்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது, நமது ஸ்ரீ வேத வ்யாஸ புராண பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஹனுமாருக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களே மாலையில் திருமஞ்சனம் செய்து அலங்காரமும் செய்தார்கள். அப்படி அலங்காரம் செய்துவிட்டு கற்பூர ஹாரத்தி செய்தபொழுது, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு ஒரு காட்சி ஏற்பட்டது. அந்தக்

காட்சியில் சுந்தர ஹனுமாரின் மார்புப் பகுதி சுருங்கி விரிவதுபோல் தோன்றியது. அதாவது, சுந்தர ஹனுமார் சுவாசிப்பது தெரியவந்தது. இதன்மூலம் இந்த சுந்தர ஹனுமாருக்கு சாந்நித்யம் ஏற்பட்டு இருப்பதையும், பிராண பிரதிஷ்டை தானே ஆகியிருப்பதையும் உணர்ந்தார்கள். இந்த சுந்தர ஹனுமாரிடம், யார் யார் எதை உத்தேசித்து மனமுருகி தர்மத்திற்கு உட்பட்டு பிரார்த்திக்கின்றார்களோ, அதையெல்லாம் பூர்த்தி செய்து வைப்பார் என்று உணர்ந்தார்கள்.

அன்று சுந்தர ஹனுமாருக்குக் கைங்கர்யம் செய்ய தத்வமஸி கனபாடிகளும், அனுபிண்டி சுப்ரமணிய அத்யாபகரும் வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் அன்று ஆசையாக கைங்கர்யம் செய்வதைப் பார்த்து, இந்த பாக்யம் இவர்களுக்கு கிடைத்ததே என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். இரவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஓய்வு எடுத்துக்கொள்வது சிறிது நேரமே. மனதினால் மஹாமந்திரம் சொல்லிக்கொண்டே படுத்துக் கொண்டிருப்பார்கள். அன்று இரவு கனவில் தத்வமஸி கனபாடிகள், போன பிறவியில் சிதம்பரம் நடராஜர் கோவிலில் தீக்ஷிதராக இருந்ததையும், வேதாந்தம் படித்திருந்ததையும் கண்டார்கள். அதுபோல், அனுபிண்டி சுப்ரமணியன் முந்தைய பிறவியில் குருவாயூர் கோவிலில் நம்பூதிரியாக பகவான் குருவாயூரப்பனை பூஜை செய்ததையும் கண்டார்கள். இந்த அனுபவங்களை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சத்சங்கத்தில் ஒரு நாள் கூறினார்கள். அதை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

(தொடரும்)

**- டாக்டர் ஆ. பாக்யநாதன்**

*ஸ்ரீ ஹரி :*

**ஸ்ரீ சுந்தர ஹனுமார் திருக்கோயில் -**
**நூதன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்**

இடம் : ஸ்ரீ வேத வியாச புராண பாடசாலை வளாகம்
கல்கரே, ராமமூர்த்தி நகர் NRI லே அவுட், பெங்களூர்

தேதி :
25-04-2008

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

*கேள்வி: பிரும்மா தன்னுடைய மகளிடமே மோஹம் கொண்டார் என்பது கேட்பதற்கே நன்றாக இல்லை அல்லவா?*

பதில்: இதில் உள்ள தத்துவத்தைப் பார்க்க வேண்டும். மும்மூர்த்திகளுக்கும் மூன்று செயல்களுக்காக மூன்று சக்திகள். ஒரு கத்தி இருக்கின்றது. அந்த கத்தியால் வெட்டுகின்றோம். எனக்கு வெட்டுகின்ற சக்தி மட்டும் வேண்டும், கத்தி வேண்டாம் என்று சொன்னால் அது முடியாத காரியம் அல்லவா? அதுபோல்தான் சிவன் என்பவரை சக்தி பிரியாமல் இருக்கின்றது. அதாவது பிரிக்க முடியாததாக இருக்கின்றது என்பதைக் காட்டவே சிவனுடைய உடலில் பாதியாக அதாவது அர்த்தநாரீஸ்வரராக இருக்கின்றாள். பாற்கடலில் உள்ள பரந்தாமனை, மஹாலட்சுமி தாயார், பெருமாள் திருவடியில் அமர்ந்து சேவை செய்து வருகின்றாள். அதாவது, திருமாலை இந்த ப்ரக்ருதி (மாயை) தொட்டும் தொடாமலும் உள்ளது.

அடுத்ததாக, ஒரு ஓவியன் அழகான ஓவியம் வரைகின்றான். அந்த ஓவியன் தன்னுடைய ஓவியத்தைப் பார்த்துத் தானே ஆசைப்படுகின்றான். ''நாம் இவ்வளவு அழகாக வரைந்திருக் கின்றோமா'' என்று பிரமிக்கின்றான். ஒரு சங்கீத வித்வான் தான் பாடியதற்கு தானே சபாஷ் போட்டுக்கொள்கின்றார். உலகத்தில் ஒவ்வொருவருக்கும் தன்னைவிட அறிவாளி இல்லை என்ற எண்ணம் நிச்சயம் உண்டு அல்லவா? அதுபோல்தான், தானே ஒரு அழகான பெண்ணை உண்டாக்கினார்! யார் அந்தப் பெண்? இந்த உலகம்தான்! தான் படைத்த உலகத்தைப் பார்த்து, தானே மயங்கினார், ஆசைப்பட்டார். இதைத்தான் உருவகப்படுத்தி அவருடைய மகள் என்று கூறியுள்ளது. இதில் தவறு ஒன்றும் இல்லை.

*கேள்வி: படைக்கும் கடவுளான பிரும்மாவிற்கு நான்கு முகங்கள். அவை, நான்கு வேதங்களை குறிப்பதுதானே?*

பதில்: அப்படித்தான் எல்லோரும் கூறுகின்றனர். ஆனால், வேதம் ஒன்றே ஒன்றுதான் என்றும் அதை நான்காகப் பிரித்து, வியாசர் கொடுத்தார் என்றும் ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகவே, படைக்கும் கடவுளுக்கான நான்கு முகங்கள், இந்த உலகத்தை நான்கு, நான்கு யுகங்களாக படைத்து நடத்திச் செல்வதற்காகத்தான் என்பதும் பொருந்தும்தானே.

***கேள்வி: நான் தினமும் நாமகீர்த்தனம் செய்ய வேண்டுமா, இல்லை புண்ய தினங்களில் மட்டும் செய்யலாமா?***

பதில்: நாம், நாமகீர்த்தனம் செய்வதே இறைவனுடைய அருளைப் பெறுவதற்குத்தான். தெய்வத்தினுடைய பலம் நமக்கு வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, எப்பொழுதெல்லாம் உனக்கு தெய்வத்தினுடைய அருள் தேவையில்லையோ அப்பொழுதெல்லாம் நாமகீர்த்தனம் செய்ய வேண்டாம்!

***கேள்வி: நாம கீர்த்தனத்தை வாய்விட்டுத்தான் செய்ய வேண்டுமா? மனதினாலும் சொல்லலாமா?***

பதில்: மனதினாலும் சொல்லலாம். வாய் விட்டும் பாடலாம். ‘மனதினால் சிந்தித்து வாயினால் பாடி’ என்பது விசேஷம். மனதினால் சிந்திக்காத ஒன்று வாயில் வராது. வாயினால் பாடும் பொழுது, பிறர் அதை கேட்கின்றார்களோ இல்லையோ. நம்முடைய காதுகள் அதைக் கேட்கின்றன. ஆகவே, நமக்கு மூன்று பலன்கள், மனதினால் சிந்தித்த பலன். வாயினால் பாடிய பலன். காதுகளினால் கேட்ட பலன்.

# பகவத் கீதையில் பகவன் நாமாக்கள்!

பகவத் கீதை பாராயணம் செய்யும்பொழுது, நாம் அதனுடன் பகவன் நாமகீர்த்தனமும் செய்துவிடுகிறோம்! பகவத் கீதையில் உள்ள சில பகவன் நாமாக்களையும், அதன் பொருளையும் காண்போமா!

- ஹ்ருஷீகேசன் - புலன்களுக்கு (இந்திரியங்களுக்கு) ஈசன்
- அச்சுதன் - தன் நிலையிலிருந்து வழுவாதவன்
- கேசவன் - கேசி என்ற அசுரனைக் கொன்றவன்
  - மும்மூர்த்திகளை வசமாய் வைத்திருப்பவன்
  - அழகிய கேசம் (முடி) உடையவன்.
- கோவிந்தன் - ஜீவர்களை அறிபவன்
- மதுசூதனன் - ‘மது’ என்ற அசுரனை அழித்தவன்
- க்ருஷ்ணன் - கருப்பு நிறத்தவன்
  - அடியார் படும் துன்பம் துடைப்பவன்
  - அழுக்கைப் போக்குபவன்
  - மும்மூர்த்திகளின் ஸ்வரூபம்
  - ப்ரும்ம ஸ்வரூபம்
- மாதவன் - ஸ்ரீ:ய பதி - திருமகளுக்குத் தலைவன்
- ஜநார்த்தனன் - மக்களால் துதிக்கப்படுபவன்
- வார்ஷ்ணேயன் - வ்ருஷ்ணி குலத்தில் உதித்தவன்
- கேசி நிஷூதனன் - கேசி என்ற அசுரனை அழித்தவன்
- வாஸுதேவன் - வஸுதேவரின் மைந்தன்
  - எல்லா உயிர்களிடத்தில் இருப்பவன்
- புருஷோத்தமன் - பரம புருஷன்
- அரிசூதனன் - எதிரிகளை அழிப்பவன்
- விஷ்ணு - எங்கும் வியாபகமாய் இருப்பவன்
- ஜகந்நிவாசன் - உலகுக்கு இருப்பிடம்
- யாதவன் - யது குலத்தில் தோன்றியவன்
- பகவான் - ஸத்குண ஸம்பன்னன்

காலையில் எழுந்தவுடன் நாம் எல்லோரும் ப்ராத ஸ்மரணீயர் களான (காலையில் ஸ்மரிக்கத் தக்கவர்களான) பாகவதர்களை நினைவு கூறுகிறோம் அல்லவா? அதில், அர்ஜுனரும் ஒருவர் தானே? அர்ஜுனருக்கு வேறு சில பெயர்கள் பகவத் கீதையில் காண்கிறோம். அவற்றையும் சற்று பார்ப்போமே!

- அர்ஜுனன் - தூய இயல்பு உடையவன்
- தனஞ்ஜயன் - அடைபட்டு கிடக்கும் செல்வத்தைச் சேகரிப்பவன்
- பாண்டவன் - பாண்டு புத்ரன்
- கபித்வஜன் - குரங்குக் கொடியுடையவன்
- குடாகேசன் - தூக்கத்தை வென்றவன்
- பார்த்தன் - ப்ருதா (குந்திதேவி)வின் மைந்தன்
- அனகன் - பாபமற்றவன்
- பரந்தபன் - எதிரிகளை வாட்டுபவன்
- கௌந்தேயன் - குந்தியின் மைந்தன்
- கிரீடி - கிரீடம் தரித்தவன்
- ஸவ்யஸாசின் - இடது கையால் அம்பு எய்பவன்
- பாரதன் - பாரத குலத்தில் உதித்தவன்
- குருநந்தனன் - குரு குலத்தில் தோன்றியவன்

**– M.K. ராமானுஜம்**

ஒரு சமயம், வெளிநாட்டில் வாழும் சிலர் (இந்தியர்கள்) நம் ஆஸ்ரமம் வந்திருந்தார்கள். மழைக் காலமாக இருந்ததால் ஆஸ்ரமத்தில் சிறு சிறு பூச்சிகளும், கொசுக்களும் அதிகமாக இருந்தன. அவர்கள், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, ''எங்கள் நாட்டில் இப்படி தொந்தரவு கிடையாது'' என்றார்கள். அதற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சிரித்துக் கொண்டே, ''என்ன செய்வது; அவை கூட இந்த புனிதமான பாரததேசத்தில் பிறப்பதற்கும், வாழ்வதற்கும் ஆசைப்படுகின்றன'' என்று கூறினார்கள்.

**– டாக்டர் ஆ.பாக்யநாதன்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 116

குரு என்றொருவன், கிராமத்தில் நன்றாக படித்துவிட்டு, சென்னையில் வேலை தேடி வந்தான். பல வேலைகளுக்கு மனு போட்டுவிட்டு, அவர்கள் அழைத்தபோதெல்லாம் நேர்முகத் தேர்வுக்கு சென்றுகொண்டிருந்தான். வேலையோ இன்னும் கிடைத்தபாடில்லை. ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆகவே, தான் கிராமத்தில் இருந்து செலவுக்கு எடுத்து வந்த தொகையைப் பார்த்துப்பார்த்து செலவழிப்பான். ஒருநாள், அவனுடைய கையில் வீட்டிற்குச் செல்வதற்கு மட்டுமே பணம் இருந்தது. அவன் பேருந்துக்காக காத்துக்கொண்டிருந்தபொழுது, தன்னுடன் படித்த இரு நண்பர்களைச் சந்தித்தான். மூன்று பேரும் வேகு நேரம் நின்றபடியே பேசிக் கொண்டிருந்தார்கள். அதில் சந்துரு என்பவன், ராஜன், குரு இருவரையும் பார்த்து, 'பக்கத்தில் உள்ள ஓட்டலுக்குச் சென்று சாப்பிடலாம்' என்று கூறினான். மூவரும் சென்றார்கள்.

குருவுக்கோ சாப்பிடும்பொழுது ஒரே வெட்கத்துடன் கூடிய கவலை. நம்மிடம் பேருந்து செலவிற்கு மட்டும்தானே பணம் உள்ளது. சாப்பிட்ட தொகையை மூவருக்கும் சேர்ந்து நம்மால் கொடுக்க முடியாதே என்பதே அது. சந்துருவிடம் பணம் இருந்தது. ஆனால், கருமி. சாப்பிடும்பொழுது, எங்காவது இதனுடைய செலவு நம்முடைய தலைமேல் விழுந்துவிடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டே சாப்பிட்டான்.

சாப்பிட்டவுடன் அந்தத் தொகையை மலர்ந்த முகத்துடன் ராஜனே கொடுத்துவிட்டான். மூவரும் ஓட்டலைவிட்டு வெளியே வந்தார்கள். அப்பொழுது குருவோ, 'நண்பா என் கையில் இன்று பணம் இல்லை. அதனால் வெட்கப்பட்டுக் கொண்டேதான் சாப்பிட்டேன்' என்று கூறி நன்றியும் கூறினான். சந்துரு தன்னுடைய சாமர்த்தியத்தை வெட்கமின்றி வெளியே கூறினான்; 'எங்கேயாவது சாப்பிட்ட தொகையை என் தலையில் கட்டி விடுவீர்களோ என்று பயந்தேன்' என்றபடி சிரித்தான்.

மூன்று பேரும் பிரிந்து செல்லும்பொழுது, ராஜாவிடம், 'நீ என்ன நினைத்தாய் என்று சொல்லவே இல்லையே?' என்றார்கள். அதற்கு ராஜாவோ, மலர்ந்த முகத்துடன், 'என்றும் இறைவன் என்னை 'எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்' என்ற மனதுடனே வைக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டேன்' என்றான்.

இதிலிருந்து நாமும் இறைவனிடம் என்ன பிரார்த்திக்க வேண்டும் என்ற தெரிந்துகொண்டீர்களா!

**- டாக்டர் ஆ. பாக்யநாதன்**

## புதிய வெளியீடுகள்

**நூல்கள் :**

1. துளஸீ தளங்கள் (பாகம் - 1)
2. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் தமிழ் கீர்த்தனங்கள்
3. Simple Questions & Simple Answers
4. நூற்றுக்கு நூறு
5. இதயத்துடன் ஓர் இதமான வருடல்
6. கலிதர்ம உந்தியார்

**ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகள் (தமிழில்)**
**Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை 2008 | DVD |
| 2. ஆண்டாள் கல்யாணம் (புதியது) | Audio CD |
| 3. ஸந்த் துக்காராம் (புதியது) | Audio CD |
| 4. துளஸீ தளங்கள் | Audio CD |
| 5. ஸந்த் நாமதேவர் | Audio CD, Cassette |
| 6. ஸ்ரீ க்ருஷ்ண லீலா | Audio CD |

**கீர்த்தனங்கள் :**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளிய **'கலிதர்ம உந்தியார்'** | Cassette, Audio CD |
| 2. **மஹாமந்திர கீர்த்தனம்** -ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் மதுரமான குரலில் | Cassette, Audio CD |
| 3. **பஞ்ச கீதங்கள்** | Cassette, Audio CD |

**ENGLISH LECTURES**

| | |
|---|---|
| 1. From Goodness to Godliness through Mahamantra Kirtan | DVD, Audio CD |
| 2. H.H. Sri Sri Muralidhara Swamiji's 'Kali Dharma Undhiyar' (Lecture in English) by Dr. A. Bhagyanathan (Live Recording) | MP3, Audio CD |

***Contact :***

Ph : 044-24895875
For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs
kindly send e-mail to "publications@madhuramurali.org"

# மாலே மணிவண்ணா - 58

- மகாவித்துவான் மயிலம் வே.சிவசுப்பிரமணியன்

சித்தம் அழகுடையதாக ஆக வேண்டுமானால் நல்ல சிந்தனைகள் சித்தத்தில் மலர வேண்டும். தீய சிந்தனைகள் சித்தத்தின் அழுக்குகள் ஆகும். சித்தத்தில் அழுக்குச் சேராமல் எப்பொழுதும் காக்க வேண்டும்.

நம்முடைய சிந்தனை எப்பொழுதும் மூன்று செய்திகளைப் பற்றிச் சுற்றிக் கொண்டுள்ளது. ஒன்று செல்வம், இரண்டு காமம், மூன்று புகழ். இம்மூன்றிலும் செல்வத்தை எப்படியாவது தேடவேண்டும் என்று துடிக்கிறது நமது சிந்தை. ''செய்க பொருளை'' என்று வள்ளுவரே

*''சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் பசுமண்*
*கலத்துள் நீர் பெய்து இரீஇயற்று''.*

என்று அடுத்துக் கூறினார். தீய வழியில் பொருள் சேர்த்து அதனால் நமக்குப் பாதுகாப்புச் செய்துகொள்ளலாம் என்றால் அது பசுமண் பானையில் தண்ணீரைச் சேமிப்பதற்கு ஒப்பாகும் என்றார். தண்ணீர் போகும்போது பானையையும் கரைத்து இல்லாமல் ஆக்கி விடுவதுபோல் தீய வழியில் வந்த பொருள் தான் அழிவதோடு தன்னை உடையானது வாழ்க்கையையும் பாழாக்கிவிடும் என்பது வள்ளுவர் தரும் அறிவுரை. பொருளுக்காக அலையும் சிந்தை ஒருபுறம். புகழுக்காக அலையும் சிந்தை ஒருபுறம். காமத்தைத் தேடி அலையும் சிந்தை ஒருபுறம். இப்படி இந்த மூன்றில் ஒன்றாலும் இரண்டாலும் மூன்றாலுமே ஓயாமல் சிந்தை அலைக்கழிக்கப் பட்டுக் கொண்டுள்ளது. இவை மூன்றுமே சித்தத்தை அழுக்காக்குபவையே. இவற்றைத் துடைத்தலே சித்த மாசு அறுப்பதாகும். இந்த மூன்றையும் ஆசை என்ற ஒன்றிலே அடக்கிவிடலாம்.

இந்த மூன்றைப் பற்றியே எப்பொழுதும் சிந்தனை செய்து கொண்டிருந்தால் பரம்பொருள் என்னும் சத்தியத்தை அடைய முடியாது. நமக்கு அழகு எது, நன்மை எது, உண்மை எது என

அறிந்து அவற்றைப் பற்றிய சிந்தனையைச் சித்தத்துக்கு ஊட்டுவதே சித்தத்திற்கு அழகாக்குவதாகும்.

அசுத்த சிந்தனை உங்களை வெளியே அழைத்துச் செல்லும். தூய சிந்தனை உங்களை உள்ளே உள்ள சத்திய வடிவான பரம் பொருளிடத்தில் அழைத்துக்கொண்டு செல்லும்.

ஆசைகளையும், பற்றுக்களையும் எப்படிக் குறைப்பது என்பதிலேயே நல்லோர்கள் சித்தம் வேலை செய்யும்.

உடலில் உயிர் வாழ்வதற்கு மிக அவசியமான உணவு விஷயத்தில் கூட குறைந்தபட்சத் தேவைக்கு மேல் எதையும் விரும்பலாகாமையை ஆசையை அறுக்கும் வழி என்றால் புகழும் காமமும் பொருளும் தேடி அதுபற்றியே எப்பொழுதும் சிந்திக்கும் சித்தம் பற்றிலேயே அழிந்துவிடுகிறது. அல்லது, ஆழ்ந்து கிடக்கிறது என்றல்லவா ஆகும். இத்தகைய சித்தம் புறத்தே நோக்கி அலைந்து கொண்டிருக்குமே அன்றி உள்முகமாகத் திரும்பி பரம்பொருளை சத்தியத்தை உணரத் தகுதியுடையதல்ல. அதனால் தான் சித்தம் அழகுபெறுதல் என்பது உள்முகம் நோக்கிய சிந்தனைகள் என்றார்கள் -

திருவெம்பாவையில் மணிவாசகர்,

*'சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை'*

என்றதும் இதுபற்றியேயாகும்.

எதுபற்றி நம் சித்தம் அடிக்கடி இடையறாமல் சிந்திக்கிறதோ அதுபற்றி நம்முடைய சிந்தனை வளர்ந்துகொண்டே போகும். - நல்ல சிந்தனைகளில் நம் சித்தம் நாட்டம் கொண்டால் அந்த வகையில் நல்வழியில் சென்றுகொண்டிருக்கும். சிந்தனையின் திசை சுத்தமாக இருந்தால் மிகச் சிறிய செய்திகளிலும் மாறுதல் ஏற்படுவதை நம்மால் உணரமுடியும்.

நாம் சித்தம் அழகியாராக ஆனால், நம் சித்தத்தில் சத்திய வடிவமான பரம்பொருள் ஒன்றும். நாமும் அதனோடு ஒன்றிச் சமாதிநிலை அடையமுடியும். புறத்தே அலையும் சித்தம் சமாதி நிலையில் ஒன்றுவது இயலாது.

எதைச் செய்கிறபோதும் நமக்காக என்று சிந்திக்காமல் பிறருக்காக, உலகுக்காக என்று சிந்திக்கிறபோது சிந்தனையில் அழகு வெளிப்படுகிறது.

சித்த அழகினை, மாசறத் துடைத்த மாணிக்கம் ஒத்த தூய சித்தத்தைப் பரிபாடல் தனக்கே உரிய முறையில் சொல்கிறது.

*''ஐந்து இருள் அற நீக்கி நான்கினுள் துடைத்துத் தம்*
*ஒன்று ஆற்றுப் படுத்த நின் ஆர்வலர்''*

என்னும் இரண்டு வரிகளில் எம்பெருமானைத் தம் சித்தத்தில் வழிப்படுத்திச் சமாதி நிலை எழுதிய நித்திய சூரிகளின் தன்மையைச் சொல்வது போலப் பரமபத நாதனாகிய எம்பெருமான் குடிகொள்ள சித்தத்தை எவ்வாறு தயார் செய்யவேண்டும் என்று சொல்கிறார் பரிபாடல் ஆசிரியர்.

**(தொடரும்)**

எந்த ஆலயங்களில் மஹாமந்திர கீர்த்தனம் நடக்கின்றதோ அந்த ஆலயங்களில் கோவில்கொண்டிருக்கும் தெய்வம் மிகவும் பாக்யம் செய்திருக்கின்றது.

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

Sri Hari :

PRANAMS TO THE LOTUS FEET OF

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

Better Financial Planning lead to Best Prosperity

We, a leading financial Corporate, provide financial planning to all HNI/NRI customers regarding child education, Retirement solutions, Tax-Planning & investment with security.

For details contact :

**N.S. MAHESH BABU,** Sr. Consultant Trainer/Financial advisor
# 16, Welders Nagar, Tanjore Road, Trichy - 620 008.
email : maheshbabu49638@icicipruparter.com
Mobile : 98941 76377 Phone : 0431-6451505

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

பிருந்தாவனத்தில் மதன்மோஹன் கோவிலின் மிக அருகிலேயே உள்ளது காளியதாக் என்னும் இடம். யமுனையின் இந்தப் பகுதியில்தான் கண்ணன் காளியனின் தலையில் நடனம் புரிந்தான். இந்த யமுனை கரையில் மரங்கள் சூழ்ந்த மிகவும் அழகான ஓர் இடம் உள்ளது. அங்கு ஒரு குடிலில் வயதான ஒரு பாபா அமர்ந்திருக்கிறார். அவர் திருமேனியின் ஒளி அந்த மாலைப் பொழுதின் இருளை நீக்குவதுபோல் இருந்தது. மென்மையாக உதடு அசைத்தவாரே கையில் ஜபமாலையுடன் ஜபம் செய்து கொண்டிருப்பதுபோல் தெரிந்தார். ஆனால், அவரது நிமிர்ந்த கழுத்தும், நிலைகுத்திய பார்வையும், முகத்தில் தவழும் புன்னகையும் அவர் ஓர் தெய்வீகக் காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்ததை நன்கு வெளிப்படுத்தின. அவர் முன் மிகவும் அழகான இளைஞன் ஒருவன் அமர்ந்திருந்தான். அவனும், ஜபம் செய்து கொண்டிருந்தான். அவன் பாபாவின் முகத்தையும் அவர் பார்வை நிலைகுத்தியிருந்த திசையையும் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவன் பாபாவின் முகத்தையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று பாபா, ''கோபாலா! பார்! பார்! கண்ணனும் பலராமனும் காட்டிலிருந்து திரும்பி வருகின்றார்கள்! எவ்வளவு மாடுகள் அவர்கள் பின்னால் உள்ளன பார்! ஆஹா! எத்தனை அழகு!'' என்று கூறினார். ''எனக்கு ஒன்றுமே தெரியவில்லை பாபா!'' என்று கண்ணீர் மல்க கூறினான் கோபால். ''நீயும் காண்பாய், நீயும் காண்பாய்'' என்று அவன் முதுகை தட்டியவாரே கூறினார் பாபா.

ஸித்தஜகதீசதாஸ்பாபா என்பது அந்த வயதான மஹாத்மாவின் பெயர். அவர் 'கோபால்' என்று பிரேமையுடன் அழைக்கும் அந்த இளைஞன்தான் பிற்காலத்தில் கௌராங்கதாஸ்பாபா என்று பிரசித்தி பெற்றவர்.

ஜகதீசதாஸ்பாபா வங்காளத்திலுள்ள வர்தமான் எனும் இடத்தில் ஒரு அந்தணக் குடும்பத்தில் பிறந்தார். அவர் மிகவும் வெற்றிகரமான ஒரு மருத்துவராக இருந்தார். தனது ஐம்பதாவது வயதில் காலனா எனும் இடத்தைச் சேர்ந்த ஸ்ரீ பகவன்நாமதாஸ் பாபாவிடமிருந்து தீக்ஷை பெற்றார். சிறிது காலத்திற்குள்ளாகவே சந்யாசமும் பெற்று பிருந்தாவனம் வந்தடைந்தார். பிருந்தாவனத்தில், முதலில் மதன்மோஹன் ஆலயத்தில் சிறிது நாள் தங்கினார். பின்பு காளியதாக்கில் ஒரு சிறு குடிலில் வசிக்கலானார்.

பாபாவின் வாழ்க்கை எளிமையாகவும் தூய்மையாகவும் இருந்தது. அவர் மதுகரி பிக்ஷை மட்டுமே ஏற்பார். அதிலும், உப்பு சேர்த்துக்கொள்ள மாட்டார். அவரது குரு, பகவன்நாமதாஸ், தனது சீடர்களுக்கு, பொதுவாக ஹரி நாம ஜபத்தை மட்டுமே உபதேசிப்பார். ஆனால், ஜகதீசதாஸ்பாபாவை அவர் பக்தியின் உயர் நிலையில் கண்டதால் அவரை ராகானுகா மார்கத்தில் பக்தி செய்யச் சொன்னார். (ராகானுகா பஜனம் என்பது ராதாக்ருஷ்ண பிரேமையில் பக்தனின் இருதயத்தில் பொங்கும் **பா**வங்களால் ஏற்படும் பக்தியாகும். இதில் சாஸ்த்ரத்தின்படி பக்தி செய்ய பக்தனால் முடியாது. எப்பொழுதும் லீலா ஸ்மரணத்திலேயே மூழ்கியிருக்கும் ஒரு நிலை இது). இதனால், ஜகதீசதாஸ்பாபா வெளி உணர்வை உணராமல் தியானத்தில் மூழ்கியிருப்பார். சில சமயங்களில், அவர் இவ்வாறு தியானத்தில் ஆழ்ந்திருக்கும்பொழுது பக்தர்கள் அவரைப் பார்க்க வருவார்கள். அவர்கள் நமஸ்காரம் செய்துவிட்டு, அவர் முன் அமர்ந்திருப்பார்கள். தியானத்திலிருந்து வெளி வரும்போது பாபா மிகவும் வருந்துவார். தான் ஏதோ பெரிய தவறு இழைத்து விட்டதாக அவருக்குத் தோன்றும். அதனால், அவர் தன் முன் ஒரு சாளக்ராமத்தை வைத்துக்கொள்ளலானார். பக்தர்கள் செய்யும் நமஸ்காரங்கள் அந்த சாளக்ராமத்தையே சேரும், தனக்கு அல்ல என்பதே அவர் **பா**வம்.

பாபாவிற்கு லீலா ஸ்மரணத்தில் சிரமம் ஏற்படும்பொழுது, அவர் வைணவர்களின் உதவியையோ பிருந்தாவன ரஜஸ்ஸின் உதவியையோ நாடுவார். ஒரு நாள், அவருக்கு எந்தவித லீலையும் காட்சியில் தெரியவில்லை. மாலைப் பொழுதில் வழக்கம்போல்

ச்ருங்காரவடத்திற்கு மதுகரி நிமித்தமாகச் சென்றார். அங்கு ப்ரேமானந்த கோஸ்வாமி என்பவர் பாபாவைப் பார்த்து, ''என்ன பாபா! தங்கள் முகத்தில் வழக்கமாக இருக்கும் ஆனந்தமும் பொலிவும் இன்று காணவில்லையே?'' என்று கேட்டார். பாபா, ''என்ன கூறுவது? இன்று எனக்கு பாக்யம் எதுவும் இல்லை. தங்களின் க்ருபையை நாடுகிறேன்'' என்று கூறினார்.

கோஸ்வாமிக்கு பாபாவினுடைய ஹ்ருதயம் புரிந்துவிட்டது. அவர் பாபாவை வ்ரஜரஜத்தில் (வ்ரஜத்தின் மண்புழுதியில்) புரளச் சொன்னார். பாபா அவ்வாறே செய்ய, மூடப்பட்டிருந்த க்ருஷ்ண லீலையின் கதவுகள் மீண்டும் திறப்பதை அவர் உணர்ந்தார். வ்ரஜ தூளியின் மஹிமையே மஹிமை!

ஒரு மீனைப் போல் சுதந்திரமாகவும் ஆனந்தமாகவும் பாபா, க்ருஷ்ணலீலை எனும் கடலில் நீந்துவார். அவரது உள் அனுபவத்திற்கேற்றார்போல் அவரது உடலிலும் உணர்ச்சிகளிலும் மாற்றங்கள் ஏற்படும். எக்காரணத்தினாலாவது அவருக்குத் தோன்றும் திவ்ய காட்சிகள் மறையுமானால் நீரில்லாத ஒரு மீனைப் போல் அவர் துடிப்பார். சில சமயங்களில் இந்த விரஹம் தாங்காமல் அவர் தன் உயிரைக்கூட விட்டுவிட எண்ணுவார். இச்சமயங்களில் அவரது சீடரான கௌராங்கதாஸ்பாபா அவரை மிகவும் கருத்துடன் கண்காணித்து வந்தார்.

ஜகதீசதாஸ்பாபாவினுடைய ஆக்ஞையின்படி கௌராங்க தாஸர் கோவர்தனத்தில் வசித்து வந்தார். ஆனால், அடிக்கடி பிருந்தாவனம் வந்து அவர் தனது குருவிற்கு சேவை செய்வார். ஒரு முறை ஜகதீசதாஸ்பாபாவின் கட்டிலின் கீழ் உறங்கிக்கொண்டிருந்த போது, பாபா தன்னுடைய பாதத்தை கௌராங்கதாஸருடைய மார்பில் வைத்தார். அதுமுதல் கௌராங்கருக்கும் ராதா க்ருஷ்ண லீலைகள் தெரிய ஆரம்பித்தன.

ஒரு முறை கௌராங்கதாஸர் ராதாகுண்டத்திற்குச் சென்றார். அங்கு ஒரு சாதுவினுடைய அழைப்பை ஏற்று அவருடன் தங்கினார். ஆனால், ஒரு இரவிலேயே அந்த சாது சரியான பாதையில் செல்பவர் அல்ல என்பதை உணர்ந்தார். துர்மார்க்கத்தைச்

சேர்ந்தவர் என்று உணர்ந்த மறுகணம், கௌராங்கர் அந்த இடத்தை விட்டு அகன்றார். ஆனால், மிகவும் சிறிய காலம் ஆனபோதிலும், கெட்ட சங்கம் அவரின் மீது பாதிப்பை ஏற்படுத்தியது. அவருக்கு ஏற்படும் க்ருஷ்ணலீலைகளின் தரிசனம் நின்றுவிட்டது. மிகவும் வேதனைக்குள்ளானார் கௌராங்கதாஸர்.

உடனே அவர் கோவர்தனத்தை வலம் வர ஆரம்பித்தார். கடும் வெய்யிலில் தொடர்ந்து வலம் செய்தவாரே அவர் கிரிராஜனிடம் பிரார்த்தனை செய்தார். மாலையில் சோர்வின் காரணமாக அவர் கண் அயர்ந்தார். அங்கு உறங்குவது மிகவும் ஆபத்து. ஏனெனில் உறக்கத்தில் சற்றே திரும்பினாலும் குண்டத்தில் விழுந்துவிடும் பேரபாயம் இருந்தது. தூக்கத்திலிருந்து எழுந்தபோது யாரோ தன்னை ஒரு பாதுகாப்பான இடத்தில் கிடத்தியிருப்பதை கண்டு வியந்தார். யார் தன்னை காப்பாற்றியிருப்பார்கள் என்று அறிய சுற்றும் முற்றும் பார்த்தார். அருகில் எவருமே இல்லை!

மறுநாள் பிருந்தாவனம் சென்று தன் குருநாதரைப் பார்த்தார். பாபாவை நமஸ்காரம் செய்த மறுகணம், பாபா அவரிடம், ''மூடனைப் போல் எங்கு வேண்டுமானாலும் உறங்குவதா?'' என்று கேட்டதும் குருநாதர்தான் தன்னைக் காப்பாற்றியுள்ளார் என்று உணர்ந்தார். குருநாதர் சிஷ்யனை நிழலைப்போல் தொடர்ந்து காப்பாற்றுகிறார் என்பதை உணர்ந்தார் கௌராங்கதாஸர். குருவின் கருணையை நினைத்து அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

கௌராங்கதாஸர் பாபாவிடம் தன் நிலையைக் கூறினார். பாபா ஆசி வழங்கி, ''மீண்டும் தர்சனம் ஏற்படும்'' என்று ஆசீர்வதித்தார். அவ்வாறே மீண்டும் லீலைகளைக் காண ஆரம்பித்தார் கௌராங்கதாஸர்.

பாபா மிகவும் வினயமாக இருப்பார். யாரையும் வாக்கினாலோ மனதினாலோகூட புண்படுத்திவிடக்கூடாது என்று மிகவும் கவனமாக இருப்பார் பாபா. தன்னை அணுகும் பக்தர்கள் மற்றும் சாதகர்களின் எல்லா சந்தேகங்களையும் தீர்த்து வைப்பார். பாபா ஒருவரையும் குறை கூற மாட்டார். வேறு உபந்யாசங்களைக்

கேட்பதை அவர் தவிர்ப்பார். இதற்குக் காரணம், பேசுபவரிடம் ஏதாவது குற்றம் தெரிந்துவிடப் போகின்றதே என்பதுதான்!

ஜகதீசதாஸ்பாபாவிற்கு ஆசை என்பது அறவே கிடையாது. ஆனால், ஒரு முறை அவருக்கு காளியதாக்கில் அழகான ஒரு குளம் நிர்மாணம் செய்யவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. தனது ஆசையை காமினிபாபு என்பவரிடம் தெரிவித்தார். விரைவிலேயே அதற்கான பொருள் திரண்டுவிட்டது. குளம் கட்டுவதற்கான வரைபடங்கள், மொத்தச் செலவு போன்றவை தீர்மானிக்கப்பட்டன. ஆனால், சில தினங்களிலேயே பாபா தனது சிந்தனை முழுவதும் பஜனையிலிருந்து விலகி இந்த குளம் சம்பந்தமான விஷயங்களிலேயே மூழ்கியிருப்பதை உணர்ந்தார். மிகவும் வேதனைக்குள்ளான பாபா தனியாக காட்டிற்குள் சென்றுவிட்டார். எல்லோரும் அவரை தேடினர். ஆனால், யாராலும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சில நாட்கள் கழித்து பாபாவே திரும்பி வந்தார். காமினிபாபு அவரை அணுகி, ''பாபா! குளம் கட்ட ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்டார். அதற்கு பாபா, ''குளம் கட்ட வேண்டும் என்ற எண்ணமே என் பஜனையை கெடுத்துவிட்டது. அந்த வேலையைத் தொடங்கினால் பஜனை முற்றிலும் நின்றுவிடும். அதனால், நான் உயிருடன் இருக்கும் வரை இந்தப் பேச்சை யாருமே எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்'' என்று கூறிவிட்டார்.

ஜகதீசதாஸ்பாபா மஹாப்ரபுவின் 'த்ருணாதபி ஸுநீசேன...' என்ற சுலோகத்தின் உருவாகவே இருந்தார் என்றே கூற வேண்டும். யாராவது அவரிடம் பிரேமையை எப்படி வளர்த்துக்கொள்வது என்று கேட்டால், பாபா, அவர்களை இந்த சுலோகத்தின்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்படி கூறுவார். மேலும், ''மனதில் ப்ரேம பக்தி வேண்டும்' என்ற ஆசையை தவிர மற்ற எல்லா ஆசைகளும் அழியும்போதுதான் க்ருஷ்ண பக்தி உதயம் ஆகும்'' என்று கூறுவார்.

சித்தர்கள் சுதந்திரமாக சரீரத்தை விடக்கூடியவர்கள். நூறு வயது ஆன பின் பாபா தனது சரீரத்தைத் துறக்க முடிவு செய்தார். அப்பொழுது கௌராங்கதாஸர் அவருடன் வஸித்து வந்தார். அவர்

மீதிருந்த பிரேமையினால், பாபாவினால் தேஹத்தை விட முடியவில்லை. அதனால் கௌராங்கதாஸரை பாபா பர்ஸானா சென்று அங்கு சேவை செய்து வருமாறு கூறிவிட்டார். கிளம்பும்பொழுது பாபா அவருக்கு மூன்று உபதேசங்கள் செய்தார் ''யாரிடமும் எந்த உதவியையும் நாடாதே. உன் இதயத்தில் உள்ள ரகசியங்களை யாரிடமும் கூறாதே. ஒரு போதும் விருந்தில் கலந்து கொள்ளாதே'' என்றார்.

கௌராங்கதாஸரும் குருவின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு பர்ஸானாவில் சேவை செய்யலானார். சில நாட்கள் கழித்து ஜகதீசதாஸ்பாபா அவர் முன்பு ஒளிமயமாக தோன்றினார். தூரத்தில் இருந்த அவரை நெருங்க எண்ணியபோது, பாபா கையசைத்து வேண்டாம் என்று கூறி மறைந்துவிட்டார். கௌராங்க தாஸருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. பெரும் துயரத்துடன் அவர் பிருந்தாவனத்திற்குக் கிளம்பினார். ஆனால், பாதி வழியிலேயே பாபா ஆஷாட மாதத்தின் ஷஷ்டி அன்றே உடலை துறந்துவிட்டார் என்ற செய்தி அவருக்குக் கிடைத்துவிட்டது!

---


ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம்**

ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், மஹாரண்யம், மதுரபுரி, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடத்தில் தினமும் நண்பகல் 12 மணியளவில் கிராமப் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

மஹாரண்யம், மலைப்பட்டு, அழகூர் மற்றும் பல கிராமங்களில் இருந்து வரும் பொதுமக்கள் இந்த அன்னதானத்தினால் பயனடைகின்றனர்.

**– டிரஸ்டிகள்**

ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ பிரேமிகவரதன் மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ பிரேமிகவரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில், ஜனவரி மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஸம்பாஷணைகளிலிருந்து - 142

*நீ நானறப்புலி நிதங்களிமயமா*
*நின்றிடு நிலையருளருணாசலா (தொடர்ச்சி)*

ரமண மஹரிஷிகள் காட்டும் ஆன்மவிசாரம் பயிலும் முறையை சற்று விரிவாக பார்ப்போம். மனது ஒருமுகப்பட்டு இருந்தால்தான் ஆன்மவிசாரம் பிடிபடும். மனது பல விஷயங்களில் ஈடுபட்டு இருக்கும்பொழுது ஆன்மவிசாரம் பயில்வது கடினம்.

மனதை ஒருமுகப்படுத்துவதற்கு பிராணப்பயிற்சி உதவும். மனதின் உற்பத்தி ஸ்தானமும், பிராணனின் உற்பத்தி ஸ்தானமும் ஒன்று என்பதால், பிராணனை (மூச்சை) அடக்கினால், மனது அடங்கும். மூச்சை லகுவாகத்தான் அடக்கவேண்டும். மனதின் உற்பத்தி ஸ்தானம் பிடிபடுவதற்காகத்தான் செய்யப்படுவது இது. பலவந்தமாக இல்லாமல், லலிதமாகவும், எளிதாகவும் செய்யவேண்டும்.

இப்படிப் பிராணனை பந்தப்படுத்திய பின்பு, பார்வையை உண்முகப்படுத்துவது அவசியம். பார்வையை உண்முகப்படுத்துவது என்பது, மனது உண்முகப்படவேண்டும் என்பதையே இது குறிக்கிறது. அப்படி பார்வையை உண்முகமாக செலுத்தி, எண்ணங்கள் எங்கு இருந்து கிளம்புகின்றன என்பதை கவனிக்க வேண்டும். இதற்கு வெகுகாலம் பிடிக்கலாம். இதில், சித்தி அடைவோமோ எனும் கவலையை விட்டொழிக்க வேண்டும். பொறுமைதான் அவசியம்.

பகவான் ரமண மஹரிஷிகளுக்கு ஒரு கணத்தில் இந்த மார்க்கம் பிடிபட்டது என்பதைக் கொண்டு, மற்றவருக்கும் அவ்வளவு காலமே பிடிக்கும் என்று கொள்வது தவறு. சைதன்ய மஹாப்பிரபு, ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் ஆகியோர் ஒருமுறை இறைவனின் நாமம் சொன்னபொழுதே அதன் உச்ச நிலையை அடைந்தனர். இது அனைவருக்கும் சாத்தியமில்லையே? பற்பல

வருடங்கள் கடும்தவம் செய்தோருக்கே கிட்டுவது அது. அதுபோல், ரமண மஹரிஷிகள் மிகப்பெரிய மஹாத்மா ஆதலின், அவர் ஒரு கணத்தில் ஆன்மவிசார மார்க்கத்தில் சித்தி பெற்றார். ஏனையோருக்கு அவரவர் பக்குவத்திற்கு ஏற்ற காலம் பிடிக்கும்.

மனதில் எண்ணங்கள் எங்கு எழுகின்றன எனத் தெரிந்த பின், ஒவ்வொரு எண்ணம் எழும்பொழுதும், ''இது யாருக்கு?'' என விசாரிக்க வேண்டும். அப்படி விசாரித்தால், எழும்பிய எண்ணம் ஒடுங்கிவிடும். ஆன்மவிசாரம் துவங்கிய காலத்தில், அதிகமான எண்ணங்கள் மனதில் தோன்றுகின்றனவே என்று எண்ணி கவலைப்படக்கூடாது. இப்படி கவலைப்படுவதும் மனதின்கண் தோன்றும் எண்ணமே.

தொடர்ந்து இப்படி விசாரித்து வர, மனது தன் உற்பத்தி ஸ்தானத்தில் நிற்கும் காலம் அதிகரிக்கும். ஒரு எண்ணத்திற்கும் மறு எண்ணத்திற்கும் இடையில் கால இடைவெளி அதிகரிக்கும். இது தெளிவாக தெரியும். மனதின் பலம் கூடுவது கண்கூடாக தெரியும்.

மனது ஒரு ஜடவஸ்துவை பற்றியே நிற்கக்கூடியது. ஏதோவொரு இந்திரியத்தின் (ஜடவஸ்து) துணை இன்றி மனது நிற்பது இயலாது. தூக்கத்தில் இந்திரியங்கள் வேலை செய்வதில்லை. ஆயின், அப்பொழுது புத்தி இருக்கும். அதனால்தான், ''இரவு நன்கு தூங்கினேன், நன்கு தூங்கவில்லை, கனவு கண்டேன்'' எனும் தூக்கத்தில் ஏற்படும் அனுபவமானது, தூக்கம் முடிந்தபின் நமக்கு தெரிகிறது. புத்தி வேலை செய்வதினால்தான் இது சாத்தியமாகிறது. இந்த நிலையில் மனது அடங்கி, லயம்தான் ஆகிறது. அழிவது இல்லை. ஆதலால், விழித்த பின் மறுபடி கிளம்புகிறது. ஆதலால், தூக்கத்தில் ஆனந்தம் ஏற்படுவது இல்லை.

ஸ்திர புத்தியும், பொறுமையும், அபார நம்பிக்கையும் இருக்கும் பட்சத்தில், மனது ஆன்மவிசாரத்தால் காலக்ரமத்தில் அழியும். இப்படி அழிந்த மனதில் ப்ரும்மத்தின் ஸ்பரிசம் (ப்ரும்ம அனுபவம்) ஏற்படும். இது வெகுகால பயிற்சியினால் அடையக்கூடிய ஒன்றே என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

முழுமையாக மனது அழியும் முன்னர், மனது சூக்ஷ்மமாகி, சாத்வீக எண்ணங்களுடன் வெளிப்பட ஆரம்பிக்கும். ஆன்ம விசாரம் செய்வதாலேயே ராஜஸ, தாமஸ குணங்கள் அழிந்துவிடும். மனது சாத்வீக எண்ணங்களை பற்றிக் கிளம்பும்பொழுது, ஒவ்வொரு எண்ணமும், ஒரு நெற்பொறி அளவு ஜோதி ஸ்வரூபமாய் மனதில் இருந்து கிளம்பி, ஸஹஸ்ராரம் நோக்கி செல்வது தெரியும்.

எந்தவொரு சாதனை பழகிவரும்பொழுதும், சாத்வீகமான எண்ணங்கள் மேலோங்கி இருக்கும்பொழுதுதான், பகிர்முகமான தரிசனங்களும், அனுபவங்களும் ஏற்படுகின்றன. பூர்வ ஜன்மங்களில் சாதகன் எந்த ஸ்வாமியை உபாசித்து வந்தானோ, அந்த ஸ்வாமியின் தரிசனம் நிச்சயம் ஏற்படும். அதுபோலவே, ஆன்மவிசாரம் பயிலும்பொழுதும், மனது சூக்ஷ்மமாகி, சாத்வீக எண்ணங்கள் மேலோங்கி இருக்கும்பொழுது, இறை தரிசனங்கள் ஏற்படும்.

எண்ணம் ஜோதி ஸ்வரூபமாய் கிளம்பினாலும், அந்த ஜோதியை ஆன்மஸ்தானத்தில் ஒடுக்க முயலவேண்டும். அப்படி செய்ய செய்ய, ஜோதி ஸ்வரூபமாய் கிளம்பும் மனதும் ஆன்ம ஸ்தானத்தில் ஒடுங்கிவிடும். கடைசி எண்ணமும் இப்படி அடிபட்டுப் போனபின், பிரும்ம அனுபவம் ஏற்படும். இதில், பூரண ஆனந்தம் ஏற்படும். இதை சொற்களால் விளக்க முடியாது.

ஒரு ஊருக்குச் செல்பவன் வழியில் வரும் ஊர்களில் இறங்குவதில்லை. இறங்கிவிட்டால், செல்ல வேண்டிய ஊருக்குச் செல்ல முடியாது. அதுபோலவே, பிரும்மானுபவம் ஏற்படும் முன்னரே கூட, மனது அடங்கி இருப்பதால், ஒருவிதமான ஆனந்தமும், இன்பமும் ஏற்படும். இதையும் கூட சொற்களால் விவரிக்க முடியாது. இப்படி ஏற்படும் ஆனந்தம் பூரணமானது அல்ல என உணர வேண்டும். அப்படி ஏற்படும் ஆனந்தத்தில் திளைத்து நிற்கப் பழக வேண்டும். மனது முழுவதும் அழியும் வரை எந்தவொரு அனுபவமும் இறுதி அல்ல என்றும், அதைத் தாண்டுவது அவசியம் என்றும் உணர வேண்டும்.

மேலும், இக்காலத்தில் ஏற்படும் சித்திகளையும் கண்டு மயங்குதல் கூடாது. அவைகளை உபயோகப்படுத்தலும் தவறு.

பொறுமையுடனும், நம்பிக்கையுடனும் சரியாகச் செய்யப்படும் ஆன்மவிசாரம் என்பது ஆகாய விமானத்தில் பறப்பதற்கு ஒப்பானது. அவ்வளவு விரைவாக ஆன்மானுபவத்தில் கொண்டு விடும் இது.

இம்மார்க்கத்தில் அவநம்பிக்கையே பெரிய தடை. நவவிதமான பக்தி சாதனையானாலும், ராஜயோக மார்க்கமானாலும், அதன் அங்கமாயுள்ள தியான முறை பயின்றாலும், மந்திர ஜபம் பயின்றாலும், ஆன்ம விசாரம் பயின்றாலும் ஏற்படக்கூடிய இறுதி நிலை என்பது பிரும்மானுபவம் என்ற ஒன்றேயாகும். இதில் ஐயமில்லை.

எவ்வளவு நூல்களில் படித்தாலும், ஆன்மவிசாரம் என்பது ஒரு பிரும்மானுபவம் பெற்ற ஜீவன்முக்தர் மூலம் நேரடி உபதேசம் பெற்றால்தான், தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

'நீ நானற' - நீ என்றும் நான் என்றும் வேற்றுமை இறைவனுடன் இல்லாதிருக்க வேண்டும் என்பதை இப்பாடல் சொல்கிறது. இதே **பா**வத்தில் அருணகிரிநாதர், ''நீ வேறெனாதிருக்க நான் வேறெனாதிருக்க'' என்று முருகன் மேல் பாடி உள்ளார். இதுவே, உயர்ந்த அத்வைத நிலை. ''நிதங்களிமயமா'' - என்றால் இறுகக் கட்டி தழுவிக்கொள்வது என பொருள். அஃதாவது இரண்டற்ற அளவில் ஒன்றிட வேண்டும் எனப் பொருள் கொளல் வேண்டும்.

இப்படி, இரண்டற்று, ப்ரும்மானுபவ நிலையில் நின்றிடும் நிலை அருள்வாய் அருணாசலா என்று பிரார்த்திக்கிறார் ரமண மஹரிஷிகள்.

**(தொடரும்)**

சந்தனக் காட்டில் உள்ள மற்ற மரங்களுக்கும் சந்தன வாசனை வந்துவிடும். அதுபோல், மஹான்களுடன் எப்பொழுதும் பழகி கொண்டிருப்பவர்களும் மஹாத்மா ஆகிவிடுவார்கள்.

**- ஆதிசங்கரர்**

# செய்திகள்

### டிசம்பர் 17 முதல் ஜனவரி 14 வரை

மார்கழி மாதம் முழுவதும், சென்னை பிரேமிகபவனம் ஸ்ரீ ஸ்ரீநிவாசபெருமாள் சன்னதியிலும், மலைப்பட்டு, மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சன்னதியிலும், மதுரபுரி மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதன் சன்னதியிலும் தனுர்மாத பூஜை நடைபெற்றது.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஆக்ஞையின்படி சென்னை, தமிழ்நாடு, பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பக்தர்களால் மார்கழி மாதத்தில், வீதி பஜனை, நாம கீர்த்தனம், பஜனை முதலியவை நடைபெற்றன.

### டிசம்பர் 20-ஆம் தேதி

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சன்னதியில், வைகுண்ட ஏகாதசீ அன்று காலையில் பரமபத வாசல் திறப்பும், பெருமாள் தரிசனமும், தொடர்ந்து மூலவர் விசேஷ திருமஞ்சனமும் நடைபெற்றன.

### ஜனவரி 1-ஆம் தேதி - ஆங்கில புத்தாண்டு - 2008

தூத்துக்குடி நாமபிக்ஷா கேந்திரா சார்பில் காலை 9 மணியளவில் நாமத்வார் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருக்கரங்களினால் துவக்கப்பட்டது.

சென்ற ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி, சென்னை காமராஜர் ஹாலில் நடைபெற்ற 2007 புத்தாண்டு மஹாமந்திர நாம கீர்த்தனக் கூட்டு பிரார்த்தனையைப் போல் 2008 புத்தாண்டு ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை, ஜனவரி 1-ஆம் தேதி சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா - தூத்துக்குடி கிளை சார்பில், மாலை 6 மணியளவில், தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி மைதானத்தில், உலக அமைதி வேண்டியும், புத்தாண்டில் எல்லோருக்கும் எல்லாவிதமான நன்மைகள் ஏற்படவும், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில், மிகவும் சீரிய முறையில் நடைபெற்றது.

இதில் 15000க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு நாம கீர்த்தனம் செய்தார்கள். இமயம் பள்ளியைச் சேர்ந்த மாணவிகளின் இறை வணக்கத்துடன் நாம வைபவம் ஆரம்பமாகியது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளர் டாக்டர் ஆ. பாக்யநாதன் அவர்கள் நமது கேந்திராவின் நோக்கங்களைப் பற்றியும், நாம கீர்த்தனத்தின் பெருமைப் பற்றியும், நாமகீர்த்தனம் செய்து கூட்டு பிரார்த்தனை செய்வதைப் பற்றியும் விளக்கவுரை ஆற்றினார்கள். நமது தூத்துக்குடி கேந்திராவைச் சேர்ந்த திரு. K. கதிரேசன், (சைதன்ய மஹாப்பிரபு நாமபிக்ஷா கேந்திரா தென்மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) திரு. நேரு பிரகாஷ், திரு. சவுந்திர பாண்டியன் இவர்களின் சீரிய தலைமையில் எண்ணற்ற பக்தர்கள், கேந்திராவின் மாதர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இந்த நாம வைபவம் சிறப்பாக அமைய ஏற்பாடு செய்திருந்தனர்.

பிறகு சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்த்ரா இளைஞர் அணியைச் சேர்ந்த தஞ்சை திரு. விஜய், சிவகாசி திரு. கற்பக்கனி, அக்சர்செம் திரு. ஞானானந்தகிரி, திரு. குணதுரை, சிவகாசி திரு. குமாரவேல் - தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த நாம அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கலந்துகொண்ட அத்துணை பேரும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுடன் ஒரே குரலில் மஹாமந்திரம் கீர்த்தனம் செய்து எல்லோரையும் பேரானந்தக் கடலில் ஆழ்த்தினர். தூத்துக்குடி கேந்திரா சார்பில் 'நாம அனுபவங்கள்' நூல் வெளியிடப்பட்டது. தூத்துக்குடி கேந்திரா திரு. நேரு பிரகாஷ் நன்றியுரை வழங்க நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

எல்லோருக்கும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.

**ஜனவரி 1-ஆம் தேதி**

மஹாரண்யம் ஸ்ரீகல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில், புத்தாண்டு அன்று அதிகாலை முதலே 5000க்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்தவாறு இருந்தனர். அன்று பகலில் நாமகீர்த்தனமும் நாள் முழுவதும் சிறப்பு அன்னதானமும் நடைபெற்றது.

### ஜனவரி 3-ஆம் தேதி முதல் ஜனவரி 12-ஆம் தேதி வரை

மதுரபுரி ஆஸ்ரமத்தில் அத்யயன உத்ஸவம் கொண்டாடப் பட்டது. மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனை ஊஞ்சலில் எழுந்தருளச் செய்து ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கீர்த்தனைகள் பாடினார்கள்.

### ஜனவரி 4-ஆம் தேதி

ஏகாதசியை முன்னிட்டு மதுரபுரியில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு திருமஞ்சனமும் ஆராதனையும் நடைபெற்றது.

### ஜனவரி 8-ஆம் தேதி - ஹனுமத் ஜயந்தி

பெங்களூர் மல்லேஸ்வரத்தில் நடைபெற்ற நகர சங்கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள். மல்லேஸ்வரம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருக்கோயிலில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் திருப்பாவைப் பற்றியும் ஆண்டாள் பற்றியும் அருளுரை வழங்கினார்கள்.

மாலையில் கல்கரே ராம மூர்த்தி நகர், ஸ்ரீ வேதவியாச புராண பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஹனுமாருக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் திருமஞ்சனம், ஆராதனை நிகழ்த்தினார்கள்.

### ஜனவரி 8-ஆம் தேதி

ஹனுமத் ஜெயந்தியை முன்னிட்டு, மாலையில் மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில், எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வீர ஆஞ்சநேயருக்கு சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனைகள் விமரிசையாக நடைபெற்றது.

### ஜனவரி 12-ஆம் தேதி - கூடாரைவல்லி

அத்யயன உத்ஸவ பூர்த்தியை முன்னிட்டு மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஆண்டாள் கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது.

### ஜனவரி 15-ஆம் தேதி

தைத்திருநாளன்று அதிகாலை சூரிய வழிபாடும் பிறகு மகர ஸங்கராந்தியை முன்னிட்டு மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு 108 குடம் பாலபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது.

### ஜனவரி 18-ஆம் தேதி

சென்னை, தி.நகர், கிருஷ்ணகான சபாவில் மாலை 6 மணியளவில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், பூனே ஸ்ரீ பாபா மஹராஜ் சதார்கர் அவர்களின் அபங்க பஜனையைத் துவக்கி வைத்தார்கள்.

### ஜனவரி 19-ஆம் தேதி

ஏகாதசியை முன்னிட்டு மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு திருமஞ்சனமும் பூஜையும் நடைபெற்றது.

மாலையில் மணிமங்கலம் சிவன் கோவில் பாலாலயத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

### ஜனவரி 26-ஆம் தேதி

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட் சார்பில் நமது குடியரசு தினம், மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் கொண்டாடப்பட்டது. அக்சார்செம் திரு. ஞானனந்தகிரி அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார்.

பாடசாலை முதல்வர் திரு. R. பாலாஜி அவர்கள் மற்றும் பாடசாலை வித்யார்த்திகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினர்.

### ஜனவரி 26-ஆம் தேதி

சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா சார்பில் மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் நாம கேந்திரா ஒருங்கிணைப்பாளர்களின் கருத்தரங்கம் நடைபெற்றது. மும்பை, பெங்களூர், ஹைதராபாத் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 150 ஒருங்கிணைப்பாளர்கள் இதில் கலந்துகொண்டார்கள்.

கேந்திராவைச் சேர்ந்த திரு. குருமூர்த்தி வெங்கடேஸ்வரன், திரு. ராமச்சந்திரன், கேந்திரா நாம கேந்திரா ஒருங்கிணைப் பாளர்களை அறிமுகம் செய்து வைத்து அவர்கள் செய்து வரும் அரிய பணிகள், நாம பிரச்சார பணிகள் விவரிக்கப்பட்டன. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஒவ்வொரு ஒருங்கிணைப்பாளர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அருளாசி வழங்கினார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளர் டாக்டர் ஆ. பாக்யநாதன்

அவர்கள் நமது ஆஸ்ரமம், அறக்கட்டளைகள் இவற்றின் குறிக்கோள்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கவுரை அளித்தார்.

சென்னை நாமத்வார் பொறுப்பாளர் திரு. பாலாஜி ராமச்சந்திரன், அயல்நாடுகளில் நமது நாம கீர்த்தனம் நடைபெறும் இடங்களையும் அதன் ஒருங்கிணைப்பாளர்களைப் பற்றியும் எடுத்துரைத்தார். பிறகு நமது கேந்திராவின் இளைஞர் அணியின் அறிமுகம் நடைபெற்றது.

**ஜனவரி 27-ஆம் தேதி**

சென்னை, ஜாபர்கான்பேட்டை, பிள்ளையார் கோயில் தெருவில் அமைந்துள்ள, அம்மன் கோவில் மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருக்கரங்களினால் நடைபெற்றது.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Personal Secretary to
**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83
Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி/இடம் |
|---|---|
| 03-02-2008 - | ஏகாதசி, மதுரபுரி ஆஸ்ரமம் |
| 06-02-2008<br>10.00 - 12.00 a.m. | அருளுரை,<br>இடம் : 28, ராஜாஜி வீதி, (தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி மேல் தளம்), திண்டிவனம். |
| 06-02-2008 மாலை - | திருவதிகை |
| 07-02-2008<br>08-02-2008 | பதினொரு கருடசேவை, ஆழ்வார் உத்ஸவம்<br>இடம் : திருநாங்கூர், சீர்காழி |
| 09-02-2008 | அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்<br>யாக சாலை பூஜை<br>இடம் : ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மன் உடனுறை ஸ்ரீ யக்ஞேஸ்வரர் சுவாமி திருக்கோவில், வெள்ளூர், போளூர் தாலுக்கா-609 605. |
| 10-02-1008<br>12.00 - 1.00 | வள்ளலார் விழா<br>இடம் : மணிமங்கலம் |
| 11-02-2008<br>காலை | வஸந்த பஞ்சமி - மஹாரண்யம்<br>ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் பிரதிஷ்டாதினம் |
| 13-02-2008<br>14-02-2008 | அருளுரை, இடம் : சேலம் |
| 15-02-2008 | அருளுரை<br>இடம் : ராம்நகர், கோவை |
| 17-02-2008 | ஏகாதசி<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 18-02-2008 முதல்<br>24-02-2008 வரை | அருளுரை<br>இடம் : புவனேஸ்வரி அம்மன் திருக்கோயில், கே.கே. நகர், சென்னை. |
| 01-03-2008 - | ஆற்காடு |
| 02-03-2008 - | ராணிப்பேட்டை |
| 03-03-2008 | ஏகாதசி<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 17-03-2008 | ஏகாதசி<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 20-03-2008 முதல்<br>27-03-2008 வரை | ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம்<br>இடம் : குருவாயூர் |

**மங்களானி பவந்து**